SURESH' IAS ACADEMY




# 23.05.2026 செய்திகள்

## மத்திய அரசுக்கு ரூ. 2.87 லட்சம் கோடி வழங்குகிறது ரிசர்வ் வங்கி

- மேற்காசிய விவகாரத்தால் கச்சா எண்ணெய் விநியோகம் தடைபட்டு இறக்குமதி கட்டணம் அதிகரித்துள்ள சூழலில் மத்திய அரசின் நிதிநிலையை வலுப்படுத்தும் விதமாக வருவாய் உபரியை ரிசர்வ் வங்கி வழங்கவுள்ளது.
- இதுதொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்ட செய்திக் குறிப்பில், "இடர் ஒதுக்கீடுகள் மற்றும் சட்டரீதியிலான நிதி ஒதுக்கீடுகளுக்கு" முன்பாக ரிசர்வ் வங்கியின் நிகர வருவாய் 2025-ஆம் நிதியாண்டில் ரூ.3.13 லட்சம் கோடியாக இருந்தது. 2026-ஆம் நிதியாண்டில் ரூ. 3.96 லட்சம் கோடியாக உயர்ந்தது. இதனால், ரிசர்வ் வங்கியின் நிதி இருப்புநிலை 20.61 சதவீதம் அளவுக்கு விரிவடைந்து கடந்த மார்ச் 31-ஆம் தேதி நிலவரப்படி ரூ. 91.97 லட்சம் கோடியாக உயர்ந்தது.
- இந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற வங்கியின் மத்திய இயக்குநர் வாரியக் கூட்டத்தில், உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதாரச் சூழல் மற்றும் எதிர்கால இடர்ப்பாடுகள் ஆகியவற்றை ஆய்வு செய்ததின் அடிப்படையில், 2025-26-ஆம் நிதியாண்டுக்கு இடர் காப்பு நிதிக்கு ரூ. 1.09 லட்சம் கோடியை மாற்ற முடிவு செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் ரூ. 44,861 கோடி மாற்றப்பட்ட நிலையில், தற்போது இரண்டு மடங்குக்கு மேல் மற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.
- அதோடு, மத்திய அரசுக்கு 2025-26-ஆம் நிதியாண்டின் வருவாய் உபரியாக ரூ. 2.87 லட்சம் கோடியை வழங்கவும் இக்கட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

## பயனற்ற உயிருக்கு விடுதலை

» ஹரிஸ் ராணா

- கல்லூரி விடுதியின் மேல்தளத்திலிருந்து விழுந்த அந்த இளைஞர் கடந்த 13 ஆண்டுகளாக செயலற்ற கோமா நிலையில் இருந்துள்ளார்.
- இவரின் மருத்துவச் செலவு உள்ளிட்ட காரணங்களை சுட்டிக் காட்டி கருணை மரணத்துக்கு தில்லி உயர் நீதிமன்றத்தை நாடிய அவரின் பெற்றோரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர், உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்த மனுவில்தான் இத்தகைய தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

» ஷரத்து 21

- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்து 21, இந்திய குடிமக்கள் அனைவரும் கண்ணியமாக வாழ உரிமை அளித்துள்ளது. வாழ்வதற்கு அளிக்கப்பட்ட இந்த உரிமை இறப்பதற்குப் பொருந்தும். இந்திய குடிமகன் அல்லது குடிமகள் ஒருவர் கண்ணியமாக மரணிக்க இயலாத நிலைகூட உரிமைப் பறிப்பே என்பதே இந்த வழக்கின் வெளிப்பாடாக கருதமுடிகிறது.

## உலகளவில் அதிக வெப்பம் இந்தியாவில் 97 நகரங்கள்

- உலகின் மிக வெப்பமான 100 நகரங்களின் பட்டியலில் 97 இடங்களை இந்திய நகரங்களே ஆக்கிரமித்துள்ளன.
- ஏ ஓ ஐ. இன் வெளியிட்டுள்ள தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்திய நேரப்படி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2:50 மணி அளவில், உலகின் முதல் 100 வெப்பமான நகரங்களின் பட்டியலில் இந்திய நகரங்களே பெரும்பான்மையாக இடங்களை பிடித்திருந்தன. இதில் ஒடிசா மாநிலத்தின் பலாங்கிர் நகரம் 48 டிகிரி செல்சியஸ் வெப்பத்துடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இப்பட்டியலில் பிஹாரின் சசாராம், உத்தர பிரதேசத்தின் வாராணசி நகரங்களும் இடம்பெற்றுள்ளன. பல. நகரங்களில் காற்றின் ஈரப்பதம் 6 முதல் 8 சதவீதத்திற்குள்ளேயே இருந்ததால், அங்கு "கடுமையான வெப்பம்" நிலவும் சூழல் உருவானது.
- உலகின் முதல் 100 வெப்பமான நகரங்களின் பட்டியலில் நேபாளத்தைச் சேர்ந்த தன்கடி (23-வது இடம்), நேபாள்கஞ்ச் (34-வது இடம்), மற்றும் லும்பினி சமஸ்கிருதிக் (76-வது இடம்) ஆகிய மூன்று நகரங்கள் மட்டுமே பிற நாடுகளைச் சேர்ந்தவையாகும். இவற்றைத் தவிர மற்ற 97 நகரங்களும் இந்தியாவைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

- வதையில்லா மரணங்கள் என்பவை கருணை மரணங்களே. இந்தியாவில் செயலற்ற வதையில்லா மரணங்களே சட்டத்தால் அனுமதிக்கப்படுகின்றன.
- அதாவது, செயலற்ற வதையில்லா மரணம் என்பது இத்தகைய மரணத்தை அடைய வேண்டியவருக்கும் அளிக்கப்படும் உணவு, மருந்து போன்றவற்றை நிறுத்துவதன்மூலம் ஏற்படுத்தப்படுகிற செயற்கை மரணம்.

» செயலற்ற வதையில்லா மரணம் :

- உலகின் பல நாடுகளிலும் இந்தச் செயலற்ற வதையில்லா மரணங்கள் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளன.
- நெதர்லாந்து, பெல்ஜியம் நாடுகள் முதன்முதலில் வதையில்லா இத்தகைய மரணத்துக்காக சட்டமியற்றின. அதைத் தொடர்ந்து லக்ஸம்பர்க், ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் போன்ற நாடுகளில் இவற்றைச் சட்டரீதியாக்கின.
- ஸ்விட்சர்லாந்து ஒருபடி முன் சென்று உடல் நலிவுற்ற நோயாளிகள் வலியின்றி மரணிக்க தாமாக தற்கொலை செய்துகொள்ள அனுமதித்துள்ளது விநோதம்.
- கனடாவும், அமெரிக்கா மாகாணங்களான வாஷிங்டன், ஓரிகான், மேன்டனா ஆகியவை மருத்துவர் உதவியுடன் கருணை மரணங்களை அனுமதிக்கின்றன.

» 1994 தீர்ப்பு :

- கருணை மரணம் குறித்த 1994-இல் உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசுக்கு எதிராக பி.ரத்னம் மற்றும் நாகபூஷன் பட்நாயக் தாக்கல் செய்த வழக்கில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்து 21-இல் வாழ்வதற்கான உரிமையையும், அதே வேளையில் வாழாமல் இருப்பதற்கான உரிமை அளிப்பதாக தெரிவித்து இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவு 309 (தற்கொலைக்கான தண்டனை குறித்த சட்டப்பிரிவு)அரசமைப்புக்கு எதிரானதாக தெரிவித்து தீர்ப்பளித்தது.
- இதன்மூலம் ஒருவர் தான் வாழ்வதற்கும், வாழாமல் இருக்கவும் உரிமை கொண்டவராகக் கருதப்பட்டார்.
- பின்னர், 1996-இல் கியான் கௌர் மற்றும் ஹர்பன்ஸ் சிங் எதிரான வழக்கில் நோயாளிகளை மரணத்துக்குத் தூண்டுவது இந்திய குற்றவியல் நடை முறை சட்டம் 1860 பிரிவு 306-இன்படி தற்கொலைக்குத் தூண்டும் குற்றம் எனத் தீர்ப்பளித்தது. இது போன்ற இரு வேறு நிலையில் தான் 2006-இல் இந்திய சட்ட ஆணையம் தனது 196-ஆவது அறிக்கையில் நீண்ட கால நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் உள்ளடக்கியவாறு தற்கொலை குறித்த இந்திய குற்றவியல் சட்டம் 1860 பிரிவு 309-இல் மாற்றங்கள் செய்ய பரிந்துரைத்தது.

» செவிலியர் அருணா :

- இந்த நிலைப்பாடுகளுக்கிடையில் 2011-இல் உச்சநீதிமன்றத்தின் மற்றொரு தீர்ப்பு முக்கியத்துவம் பெற்றது. சுயநினைவின்றி 42 ஆண்டுகள் கோமா நிலையில் இருந்த பெண் செவிலியர் அருணா சான் பாகின் கருணை மரணம் குறித்த வழக்கு அது. சமூகச் செயல்பாட்டாளர் பிங்கி வீரானி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த இந்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேலும், செயலற்ற வதையில்லா மரணம் குறித்து சில வழிகாட்டுதல்களையும் இந்தத் தீர்ப்பில் வழங்கியது.
- அதன் அடிப்படையில் இத்தகைய மரணங்களுக்கான மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மேலும், இத்தகைய மனுக்கள் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தலைமையிலான இரு நீதியரசர்களால் விசாரிக்கப்பட வேண்டும் எனவும், இவர்களுக்கு உதவ மூன்று - திறன்மிக்க மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மேற்படி மருத்துவக் குழுவின் பரிந்துரைகளை பெற்று உயர்நீதிமன்றம் செயலற்ற வதையில்லா மரணத்துக்கான உத்தரவை பிறப்பிக்கும் என வழிகாட்டுதலை வழங்கியுள்ளது.
- இந்த வழக்கில் செயலற்ற வதையில்லா மரணத்தை அனுமதித்த போதிலும், இந்த வழக்கின் மனுதாரர் பிங்கி வீரானி, நிவாரணம் கோரப்படும் அருணா சான்பாகின் உறவினர் இல்லை என்ற வாதத்தில் மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னாளில் பிங்கி வீரானியின் மேல்முறையீட்டு மனு அருணா சான்பாகினைப் பராமரித்து வரும் கிங் எட்வர்டு மருத்துவமனை கருணை மரணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில் தள்ளுபடி செய்யப்பட்ட வரலாறு என்பது வேறு.
- கருணை மரணங்கள் குறித்து காமன் காஸ் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் கடந்த 2018-இல் தொடுத்த பொதுநல வழக்கும் அதன் தீர்ப்புக்குப் பின்னரும் கருணை மரணங்கள் குறித்த பார்வை மாறியுள்ளது. இதற்குமுன் கருணைக் கொலையாகப் பார்க்கப்பட்ட இவை அனைத்தும் கருணை மரணங்களாகக் காட்சியளிக்க இந்தத் தீர்ப்பு உதவுகிறது.
- உயிர் வாழ பயனற்ற நிலையில் 100% இயக்கமற்ற உடலும் உள்ளமும் கொண்டவருக்கு அளிக்கப்பட்ட விடுதலையாகிப் பார்க்கப்படுகின்றன கருணை மரணங்கள்!